# காத்துக்கொண்டேன்!

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

## கட்டுரை - 13



# காத்துக்கொண்டேன்!

**"நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன்." (யோவான் 17:12)**

ஒரு நபர் ஓய்வுபெறுகையில், தனது பொறுப்பை மற்றவரிடம் ஒப்படைக்கும் தருணம் என்பது, எப்போதும் அந்நபருக்குத் தன்னைத்தானே சோதித்துப்பார்க்கும் தருணமாய் இருந்துள்ளது. எல்லாப் பொறுப்பாளர்களாலும் இதை கௌரவத்துடன் எதிர்கொள்ள முடிவதில்லை; மேலும், தான் பணியாற்றிய காலத்தைத் திருப்தியோடும், மகிழ்ச்சியோடும் எந்தப் பொறுப்பாளராலும் திரும்பிப்பார்க்க முடிவதில்லை. தனது சொந்தக் குறைபாடுகளையும், தோல்விகளையும் உணர்ந் திருக்கும் ஓர் ஊழியக்காரன், தனக்குப்பின் வருபவன் தனது பிழைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரக்கூடும் என்றும் அல்லது அவன் தன்னைவிடச் சிறப்பாகச் செயல்படுவதன் மூலம் தனது எஜமான் தன்னைத் திறமையற்றவன் எனக் கருதிவிடக்கூடும் என்றும் எண்ணித் தடுமாற்றம் அடைகின்றான். தனது கடமையில், தான் தெரிந்தே வழுவினதில்லை என்ற உறுதியுடன்/மனநிறைவுடன் ஓய்வுபெற முடிகின்றவனாகவும், இன்னுமாக வானமும் பூமியும் தனது பதிவுகளைத் தேடிப்பார்த்தாலும், பயப்பட வேண்டிய நிலையில் இல்லாதவனா கவும் காணப்படுகின்ற மனுஷன் பாக்கியவான் ஆவான்.

யோவான் 17-ஆம் அதிகாரத்தில் உள்ள நிகரற்ற அந்த ஜெபத்தில், நம்முடைய ஆண்டவர் ஒரு மனிதனாகத் தாம் பெற்றிருந்த பொறுப்பினைத் திரும்ப ஒப்படைக்கின்றார். அப்போஸ்தலர்களின் சிறிய குழுவையும், அதோடுகூடச் சுமார் ஐந்நூறு சகோதரர்கள் உள்ளடங்கிய விசுவாசிகளின் (1 கொரிந்தியர் 15:6) பெரிய கூட்டத்தையும் போதித்துப் பாதுகாக்கின்ற மிகப்பெரிய பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

அவர்கள் அனைவரும் இஸ்ரயேலின் ஆறுதலுக்காகக் காத்திருந்த கூட்டத்தாரைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள்;

மேலும் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தின் பெரும்பாலான காலங்களில் அவரை மனமுவந்து பின்பற்றினவர்கள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் (குறிப்பாக அப்போஸ்தலர்கள்) இஸ்ரயேலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த மனிதர்களாய் இருந்தார்கள்; அவர்களைக்குறித்துக் கர்த்தராகிய இயேசு: "*அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்*" என்று கூறியுள்ளார். இப்பொழுது அவர் தமது மனித வாழ்வின் இறுதி இரவை வந்தடைந்திருக்கின்றார்; மேலும், தேவனுடன் உள்ள அவர்களின் உறவு எவ்வளவு இணை பிரியாதது/நெருக்கமானது என்பதையும், அவர்கள் விஷயத்தில் தமக்கு இருக்கும் கடமைகள் தேவன் முன்னிலையில் எவ்வளவு பொறுப்புமிக்கது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு, இந்தச் சிறிய குழுவின்மேல் அன்புகூர்ந்த இஸ்ரயேலின் மகா தேவனை நோக்கி, பரிசுத்த வேதாகமப் பதிவுகளிலேயே மிகவும் உருக்கமானதாகவும், மகத்துவமான தாகவும் காணப்படும் ஜெபத்தை, அவர்களது செவிகள் கேட்கும்படி இயேசு ஏறெடுக்கின்றார். அவர்களுக்கு அது எத்தகையதொரு காட்சியாக இருந்திருக்க வேண்டும்! தங்கள் ஆண்டவரும், போதகருமானவர் இவ்வளவு நெருக்கமான முறையில் ஜெபிப்பதைக் காண்பதும், கேட்பதும் அவர்களுடைய உள்ளங்களை எவ்வளவு ஆழமாக நெகிழச் செய்திருக்க வேண்டும்! இது காலத்தின் வரலாற்றிலேயே ஈடு இணையற்ற ஒரு காட்சியாகவும், ஜெபமாகவும் காணப்படுகின்றது.

ஒரு சிலர் உடனடியாக இடறினார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், ஆபிரகாமின் தேவனும், இயேசுவின் தேவனும், இப்பொழுது அவர்களுடைய தேவனுமாயிருக்கின்றவர், "அவர்களை" அவர்களது தேசத்தில் மாத்திரமல்லாமல், பூமியின் சகல ஜாதிகளிலேயே மேலான ஒரு சிறந்த பொக்கிஷமாகக் கருதுகின்றார் என்ற ஆழமான நம்பிக்கை, இந்நிகழ்வின் மூலம் அவர்களுடைய உள்ளங்களில் ஆழமாகப் பதியவைக்கப்பட்டது.

"*அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர் களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்கு கிறேன்* (என்னை நான் பிரித்தெடுக்கிறேன்)" என்று இயேசு

கூறுவதை அவர்கள் கேட்டபோது, தாங்கள் "பரலோகத்தின் மேலான பராமரிப்பிற்கு/கவனிப்பிற்கு" உரியவர்களாய் இருக்கின்றனர் என்ற எண்ணமானது அவர்களது உள்ளத்தில் ஆழமாகப் பதியவைக்கப்பட்டது. இந்த ஈடு இணையற்ற மற்றும் களங்கமற்ற இயேசுவின் வாழ்க்கையானது, தங்களைப் பாதுகாப்பதற்கு என்றும், தங்களுக்குப் போதிப்பதற்கு என்றும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது என்பதை அவர்கள் ஏற்கெனவே அறிந்திருந்தனர். அந்தத் தனிமையான அறையில் நிலவின நிகரற்ற, தூய்மையான, அமைதி நிறைந்த புனிதமான சூழலில், தங்கள் ஆத்துமாக்களின் மேய்ப்பன், தமது மரணம் நெருங்கிவிட்டபடியால், தம்மிடமிருந்த பொறுப்பை தேவனிடமே மீண்டும் ஒப்படைப்பதைக் கேட்கும் சிலாக்கியத்தை அவர்கள் அடைந்தார்கள். தமது பிதாவின் பராமரிப்பில் அவர்களை ஒப்படைக்கும்போது, "***நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்களை . . . உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்***" என்று அவர் கூறின ஆழமான வார்த்தைகள், அவர்களுடைய செவிகளில் விழுந்தன. நிச்சயமாக அந்த வார்த்தைகள், இலக்கை நோக்கிச் சரியாய்ச் செல்லும் அம்புகளைப்போல அவர்களுடைய இருதயங்களைச் சென்றடைந்தன; ஏனெனில், அந்த உன்னதமான நேரத்தில் வெளிப்பட்ட அந்தத் திருவசனங்களைக் கேட்டவர்களில் ஒருவரே பின்வருமாறு எழுதியுள்ளார்: "***நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே*** **காக்கப்பட்டிருக்கிற** ***உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*** **" (1 பேதுரு 1:3, 5)**

பேதுரு தற்காலிகமாக வீழ்ச்சியடைந்தபோதிலும், அந்த அன்பான மேய்ப்பனின் வார்த்தைகள் அவர் மனதில் முன்னமே ஆழமாகப் பதிந்திருந்தபடியால், பிற்பாடு அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் யாவரிடமும், "தேவனுடைய வல்லமையானது" அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு காவல்

அரணாகச் செயல்படுகின்றது என்றும், அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களைச் சுற்றிப் பாதுகாப்பளிக்கின்றது என்றும், அது எதிராளியை எதிர்த்து நிற்பதற்கு அவசியப்படும் ஊக்கமளிக்கும் சக்தியாக விளங்குகின்றது என்றும் கூறுகின்றார்.

தேவன் தமது ஜனங்களைக் "காக்கிறவர்" என்ற உண்மை, இஸ்ரயேல் வம்சத்தாரின் வரலாற்றில் நெடுங்காலமாகவே இருந்துவருகின்றது. ஆசீர்வதிக்கும்படி கொடுக்கப்பட்ட பிரதான ஆசாரியனுடைய ஆசீர்வாத முகப்புரையிலேயே, "*கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக்* ***காக்கக்கடவர்***" என்ற வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன (எண்ணாகமம் 6:24). இதன்மூலம், ஒரு தெய்வீகப் பாதுகாப்பாளர் தங்களுக்கு உண்டு என்ற உணர்வு, இஸ்ரயேலரின் மனதில் ஆரம்பத்திலேயே பதியவைக்கப்பட்டது. பிற்காலங்களில் சங்கீதக்காரன் இந்த விஷயத்தைக் கருப் பொருளாக எடுத்துக்கொண்டு: "*இதோ, இஸ்ரயேலைக்* ***காக்கிறவர்*** *உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக்* ***காக்கிறவர்****; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக்* ***காப்பார்****; அவர் உன் ஆத்துமாவைக்* ***காப்பார்****. கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங்* ***காப்பார்***" என்று பாடினார். (*சங்கீதம் 121:4-8*)

மேலும், ஒரு குறிப்பிட்ட ஊழியக்காரனுக்கு அளிக்கப்பட்ட விசேஷித்த வாக்குத்தத்தத்தில் தேவன் பின்வருமாறு கூறியுள்ளார்: "*கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத்* ***தற்காத்து****, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்*" (ஏசாயா 42:7). அதேபோல், அதே கனத்திற்குரிய ஊழியக்காரனுக்கு மற்றொரு வடிவத்தில் அருளப்பட்ட வாக்குத்தத்தத்தில், தேவன் பின்வருமாறு கூறியுள்ளார்: "*இஸ்ரயேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக் காரனுமாயிருக்கிறவரை நோக்கி, உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும், உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரயேலின் பரிசுத்தர் நிமித்தமும்,*

**ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள் என்று சொல்லுகிறார். பின்னும் கர்த்தர்: அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன்; நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும்; கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும், இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்: அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்; சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்." (ஏசாயா 49:7-9)**

இவ்வாறாக, பல்வேறு விதங்களிலும், அநேக தீர்க்கதரிசிகள் வழியாகவும், கர்த்தருடைய தூதன் தங்களைச் சுற்றிலும் பாளயமிறங்கிப் பாதுகாக்கின்றார் என்பதையும், இஸ்ரயேலில் காணப்பட்ட விசுவாசமுள்ள ஆத்துமாக்களின் பாதுகாப்பிற்காகப் பரலோகத் தூதர்கள் காணப்படுகின்றனர் என்பதையும் தேவன் அவர்களுக்கு உணர்த்தியுள்ளார். மேலும், அவர்களுடைய எல்லா வழிகளிலும் அவர்களைக் காக்கும்படி தூதர்கள் காணப்படுகின்றனர் என்பதையும் தேவன் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த வாக்குத்தத்தங்களை இஸ்ரயேல் தேசத்தின் உண்மையான அனுபவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "இந்த வாக்குத்தத்தங்கள், எந்த விதமான சூழ்நிலைகளிலும், யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வெற்று காசோலைகள்/blank cheques போன்றதல்ல" என்பது உடனடியாக விளங்குகின்றது. இஸ்ரயேலை ஒரு முழுத்தேசமாகப் பாதுகாப்பதாக அல்லது அதன் தனிநபர்களைப் பாதுகாப்பதாகக் கர்த்தர் நிபந்தனையற்ற வாக்குத்தத்தம் எதையும் அளிக்கவில்லை. கர்த்தர் எல்லா நேரங்களிலும் அவர்களைப் பாதுகாப்பதற்காகத் தமது வல்லமையைச் செயல்படுத்தவில்லை என்பதற்கு, இஸ்ரயேலின் ஏற்ற இறக்கங்கள் நிறைந்த வரலாறே சான்றாகக் காணப் படுகின்றது. இஸ்ரயேல் என்பது ஏதோ ஒரு வாக்குறுதியால் இயக்கப்பட்டு, தன் பாதையில் சற்றும் விலகாமல் நேராகச்

செல்லும் அறிவற்ற இயந்திரம் அல்ல. அவர்கள் பிடிவாதம் மற்றும் வணங்கா கழுத்துள்ள தன்னிச்சையான ஜனங்களாகக் காணப்பட்டார்கள்; தங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரமான சித்தத்தைப் பயன்படுத்தித் தங்கள் பாதையைத் தாங்களே தேர்ந்தெடுத்து, அதில் பிடிவாதமாக நடந்தார்கள். அநேக நேரங்களில், அவர்களுடைய அந்தப் பாதை தேவனுடைய சித்தத்திற்கு முரணானதாகவே இருந்தது.

ஆகவே, இந்த வாக்குத்தத்தங்களுக்குப் பின்னால் "நிபந்தனைகள்" இருந்தன என்பது விளங்குகின்றது; விதிக்கப்பட்ட அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே, அந்த வாக்குத்தத்தங்களின் பலனை ஒருவர் உரிமையாக்கிக் கொள்ள முடியும். **அப்படியானால், இஸ்ரயேலர் மத்தியில் கவனத்துடனும், உண்மையுடனும்/விசுவாசத்துடனும் இருந்தவர்களைக் காப்பதாக தேவன் எந்த அர்த்தத்தில் வாக்களித்தார்?** அவர்களுக்கு எவ்வித காயமும், மரணமும் நேரிடாமல் தடுத்து, நீண்ட ஆயுளை வழங்குவதாக அவர் வாக்குக்கொடுத்தாரா? இக்கேள்விக்கு இஸ்ரயேலின் கனத்திற்குரிய பட்டியலில் (எபிரெயர் 11-ஐ பார்க்கவும்) பதிவு செய்யப்பட்டுள்ள மாமனிதர்களுடைய வரலாறே பதிலளிக்கட்டும்! பெரும்பாலான ஜனங்கள் அவிசுவாசத்தில் இருந்தபோது, ஒரு சிலர் மட்டும் விசுவாசத்தைக் கடைப்பிடித்ததால், அது அவர்கள் மீது தவிர்க்க முடியாத துன்பங்களையே கொண்டுவந்தது. மனிதர்களின் அதிகாரத்திற்குப் பணியாமல், தேவனுக்குக் கீழ்ப்படியத் துணிந்த அந்த வீரமிக்க மனிதர்கள்மீது, இராஜாக்களின் ஆவேசமும், ஜனங்களின் கோபமும் தங்கள் சீற்றத்தைக் கக்கின.

இவ்வாறாக, இஸ்ரயேலில் உண்மையுடன் இருந்தவர்களும்கூட மரணத்தைச் சந்தித்தனர்; **ஆனால் அவர்கள் மரணத்திற்குள்ளான அந்தத் தருணத்தில்தான் தெய்வீக வாக்குறுதி மெய்ப்பிக்கப்பட்டது.** விசுவாசத்துடன் சாட்சிபகர்வது என்பது, மரணத்தை அல்லது கசையடிகளுடன்கூடிய சிறைவாசத்தை நிச்சயம் பரிசாகத் தரும் என்ற நிலை இருந்தபோதிலும், **தேவன் அவர்களை இறுதிவரை விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்கச செய்து**

**காத்துக்கொண்டார்.** தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற தாகக் காணப்பட்டது, வெறும் தசை மற்றும் எலும்புகள் அல்ல; மாறாக, உறுதிமிக்க அந்த இருதயம், கறைபடாத அந்த நற்பண்பு மற்றும் செம்மையான அந்த விசுவாசம் ஆகியவையே ஆகும்.

அத்தகைய உண்மையுள்ள/விசுவாசமுள்ள இருதயங் களுக்குள் தேவன் தமது வல்லமையை ஒரு நதியாகப் பாயச் செய்தார் - தமது மகா வல்லமையுள்ள ஆவியின் எழுச்சியைத் தமது உன்னத சிங்காசனத்திலிருந்து அனுப்பினார். அது அவர்களின் "உறுதியான தீர்மானம்" எனும் மின்கலங் களை/batteries, பரலோக ஆற்றலால் நிரம்பி வழியச்செய்தது. அது மிக வலிமையான மனிதர்களை, இன்னும் அதிக வலிமையுள்ள வர்களாக்கியது. அது பலவீனமானவர்களை மகா இராஜாக்களை விடவும் அதிக வல்லமை படைத்தவர்களாக மாற்றியது; அதோடுகூட மாபெரும் பலசாலிகளின் முழுப்பலத்தைவிடவும், பரலோகத்தின் சிறு விரல் அசைவு அதிக ஆற்றல் வாய்ந்தது என்பதைத் தெளிவுபடுத்தியது.

தேவன் காப்பார் என்ற அந்த வாக்குறுதி நிறைவேற வேண்டுமானால், மனித இருதயத்தின் மதகுகள் திறக்கப்பட வேண்டும்; அதன் பாதைகள்/channels அடைப்பற்று, தடையின்றி இருக்க வேண்டும். அப்பொழுதுதான், அந்தப் பலத்த தெய்வீக வல்லமையானது, இருதயத்தின் ஒவ்வொரு எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் தடையின்றி ஊடுருவிப் பாய இயலும்.

ஆகவே, நம்முடைய வாழ்விலும் சரி, சாவிலும் சரி, தேவன் நம்மைப் பாதுகாக்கின்றார் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகவும், தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு சத்தியமாகவும் மற்றும் யாராலும் வெல்ல முடியாத நிதர்சனமாகவும் காணப் படுகின்றது. இஸ்ரயேலின் விசுவாச வீரர்கள் இதனை தங்கள் வாழ்வில் எப்போதும் அனுபவப்பூர்வமாகக் கண்டிருக்கின்றார்கள். எரியும் அக்கினிச் சூளைகளும், சிங்கங்களின் குகைகளும், நெருப்பின் கொடூரங்களும், பிள்ளைகளை இழந்து வாடிய தாய்மார்களின் இருதயங்களும், சிரச்சேதம் செய்யும் வாள்களும், இன்னும் எண்ணற்ற மரணங்களும் இதற்குச் சாட்சியாய்க் காணப்படுகின்றது.

கடந்த காலங்களிலிருந்து கடந்து வந்திருக்கும் "காப்பார்" என்ற இந்தச் சிறிய "மாபெரும் சொல்," தேவன் நிகழ்த்திய அற்புதங்கள் பற்றிய வரலாற்றையும், இன்னுமாக மனுஷர் அடைந்துள்ள பலதரப்பட்ட ஜெயங்கள் பற்றிய வரலாற்றையும் சுமந்துகொண்டு நம்மிடம் வருகின்றது. **மனிதர்கள் துணிந்தார்கள், தேவனோ அவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் பலவீனங்களையும் மற்றும் சூழ்நிலைகளையும் வெல்லக்கூடிய ஆற்றலைக் கொடுத்தார்.** அவ்வார்த்தையானது, மாபெரும் பொறுப்புகள் செம்மையாய்ச் சுமக்கப்பட்ட தருணங்களையும், பெரும் சவால்கள் விசுவாசத்துடன் எதிர்கொள்ளப்பட்ட தருணங்களையும் குறித்த வரலாற்றை நமக்கு விவரிக்கின்றது; மேலும் அது பல மனிதர்களின் வாழ்வு செதுக்கப்பட்ட தருணங்களையும், தேசம் ஒன்றின் (அதாவது இஸ்ரயேல் தேசத்தின்) எதிர்காலம் சரியான திசையில் வழிநடத்தப்பட்ட தருணங்களையும் குறித்து நமக்கு எடுத்துரைக்கின்றது. அநேகர் விசுவாசம் இழந்து விழுந்தபோது, இந்த மனிதர்களை **மரணம்வரை விசுவாசத்தில் நிலைத்திருக்கச்செய்து தேவன் காத்தார்**; மற்றவர்கள் கைவிடப்பட்டு, தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டபோது, தேவன் இவர்களைத் தமக்குச் சொந்தமானவர்கள் என்றும், இவர்களைத் தமது சொந்த இருதயத்தின் பொக்கிஷம் மற்றும் மகிழ்ச்சி என்றும் கருதி "காத்துக்கொண்டார்."

"*பிதாவே, நான் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்*" என்று நம் அன்பிற்குரிய ஆண்டவர் கூறினாார். ஆம்! வேகம் பேதுருவை நிலைத்தடுமாறச் செய்தபோதும், சந்தேகங்கள் தோமாவைச் சோர்வடையச் செய்தபோதும், கோபத்தின் ஆவேசம் யாக்கோபையும் யோவானையும் பரலோகத்திலிருந்து அக்கினியை வரவழைக்கத் தூண்டினபோதும், "*யார் பெரியவர்*" என்ற கடும் வாக்குவாதம் கசப்பான உணர்வுகளுக்கு இடமளித்தபோதும், அவர் அவர்களைக் காத்தார். இதுபோன்ற இன்னும் பல இடறல்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தன; ஆனால் அவை அனைத்தையும் கடந்துசெல்ல, அவருடைய மென்மையான **வார்த்தைகள்** அவர்களைப் பத்திரமாக வழிநடத்தின. அவ்வப்போது அவர்களை உற்சாகப்படுத்திய அங்கீகாரச் சொற்கள், அவர்களைக்

கட்டுப்படுத்தக் கண்டிப்புடன் வந்த கடிந்துரைகள், இராஜ்யத்தின் எதிர்பார்ப்புகளை அவர்கள் மனதில் பதியவைக்கும் போதனைகள் - இவை அனைத்தும் அவர்களைக் **காக்கும் வல்லமை கொண்டவையாய்** இருந்தன. பிசாசுகளை வென்ற வெற்றியானது அவர்களை மேட்டிமைகொள்ள முற்பட்டபோது, இராஜ்யத்தின் பணியில் பிசாசுகளை விரட்டுதல் என்பது மிகச்சிறிய காரியம் என்பதையும் அவர் அவர்களுக்கு உணர்த்தினார்.

இவ்வாறாக, மகிழ்ச்சியான காலங்களிலும் சரி, சோகமான நேரங்களிலும் சரி, பொறாமையை அழிக்கும் விதமாகவும், வெறுப்பைக் கட்டுப்படுத்தும் விதமாகவும், வாக்குவாதங்களை அடக்கும் விதமாகவும் அவர் பேசினார்; மேலும் அன்பைத் தூண்டி, நம்பிக்கையை ஊட்டக்கூடிய வார்த்தைகளைப் பேசினார். ஆனால், இவை அனைத்திற்கும் மேலாக அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தது, **பிதாவின் அன்பைப்பற்றிய** செய்திதான்! "*நீர் எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்*" - **தேவனுடைய நாமம், அவருடைய நற்பண்புகள், அவருடைய அன்பு, அவருடைய பரிசுத்தம் மற்றும் அவருடைய சர்வவல்லமை** ஆகியவற்றை, மனதை ஈர்க்கும் எளிய உவமைகளின் மூலம் அவர் அவர்களுக்கு விளக்கினார்; அவை நேராக அவர்கள் இருதயத்தில் பதிந்து, அவர்களின் ஆர்வத்தை ஈர்த்தன.

பிறகு, "*நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்*" என்று இயேசு கூறினார். இந்த மிக முக்கியமான அடிப்படை உண்மையை அவர்கள் விசுவாசித்த காரியமானது, அவர்களை உறுதியாக நிற்கச்செய்தது; அதேசமயம் இதை விசுவாசியாமற்போன காரியமே, மற்றவர்கள் வீழ்ச்சியடையக் காரணமானது.

ஜெபம் முடிந்ததும், அவர்கள் அந்த இரவுப்பொழுதில் வெளியே சென்றார்கள் - ஆண்டவர் தமது கெத்செமனே அனுபவத்திற்குள் சென்றார்; சீஷர்கள் தளர்ந்துபோனார்கள் மற்றும் ஓடிப்போனார்கள். பேதுரு தடுமாறி வீழ்ந்தார்; தோமா சந்தேகத்தின் படுகுழியில் மூழ்கினார்; "இஸ்ரயேலை அவர் மீட்கவில்லையே" என்ற குழப்பமான நினைவுகளுடன் மற்றவர்கள் மனமுடைந்து பின்வாங்கினார்கள். ஆயினும், பேதுருவின்

இருதயத்தில் ஏதோ ஒன்று ஆழமாகப் பதிக்கப்பட்டிருந்தது; அது அவருடைய மிதமிஞ்சிய வேகத்தைக் கட்டுப்படுத்தி, அவரை மனஸ்தாபக் கண்ணீர் வடிக்கச்செய்ததோடு, யூதாசைப்போல முற்றிலும் அழிந்துவிடாதபடி பாதுகாத்தது. அந்தச் சந்தேக வாதியின் (தோமாவின்) மனதிற்குள் முன்னமே விதைக்கப்பட்டிருந்த ஏதோ ஒரு விசுவாசம், அவரைப் பிற்பாடு மீண்டும் அந்த மேல்வீட்டு அறைக்குச் செல்லத் தூண்டியது - அங்கே அவருடைய சந்தேகம் உடனடியாக முறியடிக்கப்பட்டது. "*அவரே நம்மை மீட்டு இரட்சிப்பவர் என்று நம்பியிருந்தோமே*" என்று சோகத்துடன் சொன்னவர்களின் இருதயங்களில் முன்னமே விதைக்கப் பட்டிருந்த அந்த நம்பிக்கை, அவர் அப்பம் பிட்பதைக் கண்டபோது, மீண்டும் புது வீரியத்துடன் துளிர்விட்டது.

ஆண்டவர் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த அந்த ஓர் இருண்ட காலத்திற்குப் பிறகு, பாதுகாக்கும் அந்த வல்லமை மீண்டும் செயல்படத் தொடங்கியது; உயிர்த்தெழுதலுக்கு முந்தைய நாட்களில் சீஷர்களிடத்தில் விதைக்கப்பட்டிருந்த **வார்த்தைகள்,** செழிப்பான பலனைத் தந்தன. அச்சமும், தயக்கமும் கொண்டிருந்த அந்த மனிதர்கள் பலம் பெற்றார்கள்; சிறைச்சாலையின் இருளான அறைகளோ அல்லது அதிகாரிகளின் தண்டனைக் கோல்களோ அவர்கள் சாட்சிசொல்வதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்களில் பலர் மரணத்தைச் சந்தித்தனர் - இதன்மூலம், தேவன் காப்பதாகக் கொடுத்த வாக்குறுதி, வெறும் ஊனும் எலும்பும்கொண்ட இந்த உடலைப் பற்றினது அல்ல என்பது மீண்டும் உறுதியாகுகின்றது. **மாறாக, தெய்வீக வல்லமை அவர்களின் இருதயங்களில் ஒரு மகா வல்லமையை உருவாக்கி, எந்தவொரு நெருக்கடியையும் தாங்கிநின்று எதிர்கொள்ள அவர்களைப் பக்குவப்படுத்தியது. அவர்களின் பலவீனத்தில் அந்தத் தெய்வீக வல்லமை பலமாய்ச் செயல்பட்டு, அவர்களை முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாய் மாற்றியது.**

மேல்வீட்டு அறையிலிருந்த அந்தச் சிறிய குழுவில், ஒருவர் மட்டுமே தொலைந்துபோனார். யூதாஸ் ஒருபோதும் அந்தக் **காக்கும் வல்லமைக்குத்** தன் உள்ளத்தை **இணங்கக் கொடுத்ததே** இல்லை. அவர் பண்பட்ட ஒரு மனிதராகத் தெரிந்தாலும், ஒரு

திருடனாகவும், வழிநெடுகிலும் **குறைகூறி வந்த விமர்சகராகவுமே** இருந்தார். உணர்ச்சியற்றவரும், எதையும் கணக்குப் போட்டுப்பார்க்கும் குணம்கொண்டவருமான அவர், மற்றவர்களை வழிநடத்த விரும்பினாரே தவிர, தான் வழிநடத்தப்பட விரும்பவில்லை; இறுதிவரை சதிகாரனாகவும், துரோகியாகவுமே இருந்தார்! சோதனை வந்தபோது, அவர் விழுந்துபோனார்! அவர் அவ்வாறு விழுந்தது போதகரின் தவறு அல்ல. மற்றவர்கள் எதையெல்லாம் கண்டும் கேட்டும் உணர்ந்திருந்தார்களோ, அவைகளைக் காணும் வாய்ப்பை யூதாசும் பெற்றிருந்தார்; மற்றவர்களுக்குப் பாதுகாப்பளித்த அதே சத்தியம், அவருக்கும் கிடைத்திருந்தது. ஆனால், மற்றவர்களைப்போல அவர் **"பாதுகாக்கப்படத்தக்கவராகவோ"** அல்லது **"இரட்சிக்கப் படக்கூடிய பக்குவம் கொண்டவராகவோ"** இருக்கவில்லை. கண்களால் கண்ட காட்சிகளோ, காதுகளால் கேட்ட உபதேசங்களோ அவருக்குள் எந்தவொரு நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதனால், அந்தச் சோதனை காலத்தை எதிர்கொள்ள அவர் எவ்வித ஆயத்தமுமின்றி இருந்தார்; அவர் வாழ்ந்த காலமெல்லாம் "பொருளாசையை" தனது தெய்வமாகக் கொண்டிருந்தார் மற்றும் அதே நிலையிலேயே அவர் இறந்தும்போனார். பிறப்பால் அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தபோதிலும், குணாதிசயங்களில் அவர் பொல்லாங்கனுடைய பிள்ளையாகவே இருந்தார்.

துரோகியான யூதாசையும், மறுதலித்த பேதுருவையும் அருகருகே வைத்துப் பார்க்கும்போது, அந்தக் **காக்கும் வல்லமை** எத்தகைய **விளைவுகளை/மாற்றங்களை** ஏற்படுத்தும் என்பதை நாம் இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும். பேதுருவிடம் பல பெலவீனங்கள் இருந்தன - முன்னாலோசனையின்றிச் செயல்படுதல், அடக்கமுடியாத வேகம், யோசிக்காமல் சட்டென்று பேசும் குணம் எனப் பலவற்றைக் கூறலாம்; ஆயினும் அவர் **திருத்தங்களுக்குப் பணிந்துபோகும்** குணம் கொண்டவராக இருந்தார். அவர் பாதையைவிட்டுச் சற்றே விலகிச்சென்றாலும், மேய்ப்பனின் கோல் அவரை மீண்டும் நேர்வழிக்கு இழுத்து வந்துவிட்டது. மற்றவர்கள் விலகிச்சென்றபோது, இயேசு அவர்களிடம் கேள்விகேட்டார் (யோவான் 6:66, 67); அப்போது,

***"ஆண்டவரே, நாங்கள் யாரிடத்தில் போவோம்? நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில்தானே இருக்கின்றன!"*** என்று சட்டென்று பதிலளித்ததும் பேதுருதான். இத்தனை குறைகள் இருந்த போதிலும், அவர் அந்த "மிக நெருக்கமான மூவரில்" ஒருவரானார்; இது அவரது இருதயத்திலிருந்த நேர்மையான நற்குணத்தையும், கபடற்ற உண்மைத்தன்மையையும் வெளிப்படுத்துகின்றது.

சோதனை வேளை நெருங்கி வந்தபோது, பேதுருவுக்காக போதகர் ஜெபம் செய்தார். பேதுருவின் உள்ளம் காப்பாற்றப் படத்தக்க நிலையில் காணப்பட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். சூறாவளி போன்று காணப்பட்ட சூழ்நிலைகளின் வேகம் பேதுருவை நிலைகுலையச் செய்யும் என்பதை அவர் அறிந்திருந்தார்; ஆனால், அவர் மீண்டும் எழுவார் என்பதையும், தனது மனந்திரும்புதலுக்குப் பிறகு, தன் சகோதரர்களுக்குப் பக்கபலமாக காணப்படுவார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனால் யூதாசுக்காக, இயேசு எதையும் பேசவில்லை. அவர் பொல்லாங்கனுடைய பிள்ளை என்பதை இயேசு அறிந்திருந்தார், எனவே அவரது சுதந்திரமான முடிவில் இயேசு தலையிடவில்லை.

**"இவன் என்னுடையவன்"** என்று தேவனால் சொல்லப் படக்கூடிய ஒருவராய் பேதுரு இருந்தார். அதேசமயம் **"இவன் என்னுடையவன்"** என்று சாத்தானால் சொல்லப்படக்கூடிய ஒருவராய் யூதாஸ் இருந்தார். பேதுரு தெய்வீக மேய்ச்சல் நிலத்தின் **உண்மையான ஆடாக** இருந்தார்; ஆனால் யூதாசோ, ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டிருந்த ஓர் **ஓநாயாக இருந்தார்.** தேவனுடைய ஆடாகிய பேதுருவை நல்ல மேய்ப்பனால் பாதுகாக்க முடிந்தது, மேலும் வழிதவறின அவரை மேய்ப்பன் மீட்டுக்கொண்டு வரவும் முடிந்தது. ஆனால், ஓநாயைப் பாதுகாக்கும்படி ஆண்டவர் நியமிக்கப்படவில்லை; மாறாக, அதன் வீழ்ச்சியையும், அழிவையும் உறுதிப்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. இருவர் மீதும் ஒரே விதமான ஆவிக்குரிய தாக்கங்கள் செலுத்தப்பட்டன; இருப்பினும் ஒருவர் மீட்கப்பட்டார், மற்றவரோ அழிந்துபோனார்.

கர்த்தருக்குள்ளான சகோதர சகோதரிகளே, தேவனுடைய சத்தியத்தில் **தரம் பிரிக்கும் ஒரு வல்லமை/தீர்மானிக்கும் ஒரு வல்லமை** இருக்கின்றது; அந்தச் சத்தியம் ஒருவரின் இருதயத்திலுள்ள சுபாவத்தைப் பொறுத்து, சிலருக்கு **வாழ்வு தரும் நறுமணமாகவும்**, மற்றவர்களுக்கு **மரணத்திற்கு ஏதுவான வாசனையாகவும்** அமைகின்றது!

ஏன் இப்படி நடக்கின்றது? இந்த வித்தியாசம் மனித இருதயத்திலிருந்தே உருவாகுகின்றது; இது சத்தியத்திற்கு ஒருவன் அளிக்கும் பதிலின் பின்னணியிலுள்ள **உள் நோக்கத்தையே** சார்ந்துள்ளது. சிலர் எளிய மனதுடனும், ஆழ்மனம்வரை உண்மைத்தன்மையுடனும் இருக்கின்றார்கள்; மற்றவர்களோ தறிகெட்டு நடப்பவர்களாகவும், துணிகரம் கொண்டவர்களாகவும், தேவனுடைய வார்த்தையோடும், அவரது வழிநடத்துதலோடும் விளையாடுபவர்களாகவும் இருக்கின் றார்கள். இன்னும் சிலரோ வஞ்சகம் நிறைந்தவர்களாகவும், பேராசை கொண்டவர்களாகவும், பதவி மற்றும் அதிகாரத்திற்காக ஏங்குபவர்களாகவும் இருக்கின்றார்கள்; தங்கள் நோக்கத்தை அடையும் தங்களது முயற்சியில், யாராவது பாதிக்கப்பட்டாலும் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

மந்தையின் மேய்ப்பன், அழிவை உண்டாக்கும் **ஓநாயைப்** பாதுகாக்கும்படி நியமிக்கப்படவில்லை. தறிகெட்டு அலையும் **வெள்ளாட்டைக்** கட்டிப்போடும்/பராமரிக்கும் **பொறுப்பு அவருக்கு அளிக்கப்படவில்லை**; மாறாக, எத்தகையச் சூழ்நிலையிலும் தேவனுடைய **ஆடுகளைப்** பேணவும், பாதுகாக்கவும் மற்றும் அவைகளுக்கு உணவளிக்கவுமே அவர் சர்வவல்லமையுள்ள மேய்ப்பனாகப் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

மெய்யான ஆடு அவரது குரலைக் கேட்கின்றது. வெள்ளாடும் அந்த மேய்ப்பனின் குரலைக் கேட்கக்கூடும்; ஏன், ஓநாய்கூட அவரது குரலைக் கேட்கலாம்! ஆனால், மெய்யான ஆடு மட்டுமே கேட்ட மாத்திரத்தில் **கீழ்ப்படிகின்றது.** வெள்ளாடோ எதையும் சட்டை செய்யாமல் தன் போக்கில் அலைந்து திரியும். ஓநாயோ, தன் இரைக்காகக் காத்திருந்து பதுங்கிப் பதுங்கிச் சுற்றிவரும். ஒருவன் தேவனால் "பாதுகாக்கப்படத்தக்க/ காக்கப்படத்தக்க" நிலையில் இருப்பதற்கு, அவன் அன்றாட

வாழ்வில் தெய்வீக வழிநடத்துதலின் தாக்கங்களுக்கு **உடனடியாகச் செவிசாய்ப்பதே** ஆணிவேராய் அமைகின்றது; ஆனால், கீழ்ப்படியத் தயங்குவதோ அல்லது மறுப்பதோ, அந்தத் தெய்வீகப் "பாதுகாப்பை" தடுத்துவிடுகின்றது.

ஆடுகள் ஒருபோதும் வெள்ளாடுகளாக மாறுவதில்லை; அவை ஓநாய்களாகவும் உருமாறுவதில்லை. சகோதரன் என்று அறியப்பட்ட ஒருவர் வீழ்ச்சியடைந்தால், அவர் உண்மையிலேயே ஆடாக இருந்தாரா என்பதே கேள்வி ஆகும். மற்ற "பதினொரு சீஷர்களும்" யூதாசை ஆடாகக் கருதினதுபோலவே, சபையாரும் அச்சகோதரனை ஆடு என்று எண்ணியிருக்கலாம்; ஆனாலும் கர்த்தர் ஆரம்பத்திலிருந்தே மனதின் உண்மையை அறிந்திருப்பவர் ஆவார். உண்மை வெளிப்படுவதற்குச் சரியான நேரமும், சூழலும் மட்டுமே தேவையாக இருக்கின்றது; வேஷமிடுகிறவனைப் பாதுகாப்பதற்கு மேய்ப்பனின் வல்லமை இல்லாதிருப்பதினால், அவன் விழுந்துபோவான்.

ஒரு மெய்யான ஆடாக மேய்ப்பனின் பராமரிப்பை அனுபவிப்பது என்பது, ஓர் ஆசீர்வாதமான காரியம் ஆகும். ஆனால், மந்தைக்குள் கள்ளத்தனமாக நுழைந்து, மேய்ப்பனின் பராமரிப்பை அறியாமல் இருப்பது மிகவும் ஆபத்தான நிலை ஆகும். அத்தகையவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை திவ்விய வார்த்தைகளை ஆர்வமாகப் படிப்பதுபோன்று தங்களைக் காண்பித்துக்கொள்ளலாம்; ஆனால், பரிசுத்த ஆவியின் இனிமையான பிணைப்பு இல்லாமலும், மேய்ப்பனுடன் உள்ள ஐக்கியத்தில் கிடைக்கும் அன்பான அரவணைப்பு இல்லாமலும் போகும்போது, படிப்பின் மீதான ஆர்வம் அவர்களுக்குக் குன்றிபோய், ஈடுபாடு அற்றுப்போகின்றது.

கர்த்தர் ஒரு மெய்யான ஆட்டை ஒருபோதும் இழப்பதில்லை; அவர்களை இறுதிவரை காக்கின்றார்.

ஆமென்!

- BIBLE STUDENT ARCHIVES

# புதுச் சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள்

## [ஆகஸ்டு 2025 - பிப்ரவரி 2026]

**20** **01, ஆகஸ்டு 2025**

# உண்மை

வாழ்க்கையின் பொறுப்புகளை ஒரு கிறிஸ்தவன் எதிர்கொள்கையில், அவனுக்கு இருக்கும் இனிமையான மற்றும் மிகுந்த ஊக்கமளிக்கும் ஒரே சிந்தை யாதெனில் . . . அது "தனது இருதயத்தில் உள்ள பக்தியின் உண்மைதனைத் தேவன் அறிவார்" என்பதேயாகும். வாழ்க்கையில் சந்திக்கும் சகல ஏற்றத்தாழ்வுகள் மத்தியில், கிறிஸ்தவனால், தேவனுடைய முகத்தை ஏறெடுத்துப் பார்த்து, "தேவனே! உம்மை நான் நேசிக்கின்றேன் என்பதை நீர் அறிவீர்!" என்று சொல்ல முடிவது என்பது எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? அது வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு மகிழ்ச்சியான தருணங்களிலும், ஒவ்வொரு துயரமான தருணங் களிலும் தஞ்சமடையும் அடைக்கலத்தைக் கண்டடைந்ததற்குச் சமமாகவும், அது ஒருவிதமான இளைப்பாறுதலாகவும் காணப்படும்.

- Bible Student's Library (1951)

**21** **01, செப்டம்பர் 2025**

# நில்லுங்கள்

உங்களால் எதுவும் செய்ய முடியாதபோது,
உறுதியாக மட்டும் நில்லுங்கள்.

"சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நில்லுங்கள்."

ஆனால் எப்படி மற்றும் எங்கு நிற்கிறீர்கள் என்பதில்
கவனமாக இருங்கள்.

"விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள்."

உங்களது உடன்படிக்கையின் அடிப்படையில் நில்லுங்கள்.

எதிரியை எதிர்த்து நில்லுங்கள்.

கவனித்து நில்லுங்கள், காத்திருங்கள்...
வெற்றி கொள்ளுங்கள்.

"அசையாமல் நின்று கர்த்தருடைய இரட்சிப்பைப்
பாருங்கள்."

உங்கள் சொந்த இஷ்டப்படியோ அல்லது மனித கட்டளைப்படியோ நிற்காதீர்கள்.

செங்கடல் போன்ற தடைகள் உங்கள் வழியில் காணப் பட்டாலும், எந்தத் தயக்கமும் இல்லாமல் நீங்கள் முன்னேறுவது தேவனுடைய சித்தமாக இருக்கலாம்...

நிற்பதைவிட அணிவகுத்துச் செல்வது எளிதுதான்; அசையாமல் நின்று கடுமையாகத் தாக்கப்படுவதைவிட, விரைந்து பாய்ந்து தாக்குவது எளிதுதான்; எனினும் ஒரு நல்ல வீரன் மேற்கூறிய இரண்டிற்கும் தயாராக இருக்க வேண்டும்.

தங்கள் இராஜாவுக்காக அணிவகுத்துச்சென்று போரிடுபவர்கள்... அவருக்குச் சேவை செய்பவர்களாக கருதப் படுவார்கள்; அதேசமயம் "நின்றுகொண்டு காத்திருப்பவர் களும்கூடச் சேவை செய்கிறவர்களாகவே கருதப்படுவார்கள்."

பொறுமையும், மனஉறுதியும் தேவனுடைய பார்வையில் விலையுயர்ந்தவை, மேலும் "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே சிறந்தது."

பொறுமை தன் பூரண கிரியையைச் செய்யவேண்டிய தருணங்களின்போது, அதாவது நெருக்கடியும் சிரமமும் உள்ள போராட்டத்தின்போது அல்லது காத்திருக்கும் சோதனையின் போது, அங்கே நாம் பொறுமையாக நிலைத்திருப்பதே மிகவும் சிறந்ததாக இருக்கும்."

- R573

**22** **01, அக்டோபர் 2025**

# தேவனுடைய கரங்கள்

நம்முடைய வாழ்க்கை, கடிகாரத்தினுடைய எண் முகப்பு/dial போன்றிருக்கின்றது. கடிகாரத்தில் சுழலும் முட்கள்/hands, தேவனுடைய கரங்கள் போன்றிருக்கின்றது. அதன் முட்கள் மீண்டும் மீண்டும் கடிகாரத்தின் முகப்பில் சுழல்கின்றன. அதன் சின்ன முள்/Short Hand, சீர்த்திருத்தத்திற்கு ஏதுவான பயிற்சி அளிக்கும் தேவனுடைய கரம் போன்றும், அதன் நீள முள்/Long Hand இரக்கம் பாராட்டும் தேவனுடைய கரம் போன்றும் காணப்படுகின்றன.

சீர்த்திருத்தத்திற்கு ஏதுவான பயிற்சி அளிக்கும் கரமானது, மெதுவாகவும் உறுதியாகவும் நகர்ந்து செல்கின்றது; மேலும் அதன் ஒவ்வொரு அசைவிலும் தேவனுடைய குரல் ஒலித்துக் கொண்டிருக்கும்; அதேசமயம் இந்தப் பயிற்சி/சிட்சை மற்றும் சோதனை எனும் தேவனுடைய கரத்தின் ஒவ்வொரு அசைவின் போதும், அதே முகப்பில் தொடர்ந்து சுழன்றுகொண்டிருக்கும் தேவனுடைய இரக்கத்தின் கரம் அறுபது மடங்கு ஆசீர்வாதங்களைப் பொழிகின்றது. கடிகாரத்தில் இந்த இரண்டு கரங்களுமே ஒரே உறுதியான மையப்புள்ளியில் பிணைக்கப்பட்டுள்ளது; அந்த உறுதியான புள்ளி தேவனுடைய இருதயத்தை அடையாளப் படுத்துகின்றது.

- Bible Student's Library (1951)

**23** **01, நவம்பர் 2025**

# கனிந்த பழத்திற்கான அடையாளங்கள்

முதிர்ச்சியடைந்துள்ள குணலட்சணத்தினை தனித்துவமாகக் காட்டும் அடையாளங்கள் என்னென்ன?

"அழகு" என்பது, கனிந்த பழத்திற்குரிய முதல் அடையாள மாகும். கனிந்த பழமானது, அதற்கேயுரிய அழகினைப் பெற்றிருக்கும். பழமானது கனியக்கனிய, சூரியன் அதற்கு அழகிய வண்ணங்களை அளித்து, அதன் நிறங்களை ஆழமாக்குகின்றது; இதனால் பழத்தின் அழகு, பூவின் அழகிற்குச் சமமாகின்றது; மேலும் சில அம்சங்களில் பூவைவிட மிஞ்சியும் காணப்படுகின்றது. கனிந்த/முதிர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவனிடத்தில் பரிசுத்தமாகுதலின் அழகினைக் காணலாம்; இதை தேவனுடைய வார்த்தைகள் "பரிசுத்த அலங்காரம்" என்று குறிப்பிடுகின்றது.

"மென்மை" என்பது, கனிந்த பழத்திற்குரிய மற்றுமொரு அடையாளமாகும். பிஞ்சு பச்சை காயானது, கடினமாகவும், கல் போன்றும் காணப்படும். முதிர்ந்த கிறிஸ்தவன் மென்மையான ஆவியினை உடையவனாக அறியப்பட்டிருப்பான்.

"தித்திப்பு" என்பது, கனிந்த பழத்திற்குரிய மற்றுமொரு அடையாளமாகும். கனிந்திராத பழம் புளிப்பு சுவை உடையதாகக காணப்படும். ஆவியின் கனிகள் வளரும்போது, நாம் அனுதாபத்திலும்,

அன்பிலும்கூட நிச்சயமாக வளருவோம்; மேலும் நமது ஆவிக்குரிய கனிகள் கனியும்போது, நம்முடைய சக கிறிஸ்தவர்களிடம் நாம் அதிக இனிமையுடன் பழகுகின்றவர்களாக இருப்போம். கசப்பான ஆவியை உடைய கிறிஸ்தவர்கள் அநேக காரியங்களைப் பற்றிய அறிவை உடையவர்களாக ஒருவேளை காணப்படலாம் . . . இவர்கள் கண்டனம் செய்வதில் விரைவானவர்கள் என்பதால், தீர்ப்பு வழங்குவதிலும் மிகவும் கூர்மையாக ஒருவேளை இருக்கலாம் . . . ஆனாலும் இவர்கள் இருதயத்தில் இன்னும் முதிர்ச்சியடை யாதவர்களே ஆவார்கள்.

"தளர்வான பிடி" என்பது, கனிந்த பழத்திற்குரிய மிகவும் தெளிவான மற்றுமொரு அடையாளமாகும். கனிந்த பழமானது தண்டிலிருந்து எளிதாகப் பிரிக்கப்படலாம். இது (முதிர்ந்த கிறிஸ்தவன் கொண்டிருக்கும்) உலகத்தின் மீதான தளர்வான பற்றுதலை/பிடிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

- Bible Student's Library

**24** **01, டிசம்பர் 2025**

# சமாதானம்

நான் என்னைச் சுற்றி நோக்கிப்பார்க்கையில் . . . எத்தனை மனுஷர்கள் என்னைப் போன்று அல்லது ஒருவேளை இன்னும் ஆழ்ந்த துயரங்களில்/பெரிய சங்கடங்களில் காணப்படுகின்றார்கள் என்றும், அடைக்கலமாய்த் தஞ்சம்புகுவதற்கு அவர்களுக்கு ஒரு தந்தை இல்லையே என்றும் பார்க்கின்றேன்.

நான் பின்னே திரும்பிப்பார்க்கையில் . . . நான் வழிநடத்தப்பட்ட மொத்த பயணத்தையும், மேலும் நான் கண்ட டைந்த அளவில்லா இரக்கத்தையும் நினைத்துப்பார்க்கின்றேன்.

நான் முன்னே நோக்கிப்பார்க்கையில் . . . என் பரலோக வாழ்வு வாசலருகே இருப்பதைப் பார்க்கின்றேன். அங்கே எனது வழிகாட்டியாகிய இயேசுவும், எனது தேவனும் இருக்கின்றார்கள்; விரைவிலே நானும் அங்கே போய் சேர்ந்திடுவேன்.

இப்படி நான் சுற்றியும், பின்னேயும், முன்னேயும் நோக்கிப் பார்த்து சிந்தித்த பிற்பாடு, எனது துன்பத்தை அதன் முக்கியத்துவம்

மற்றும் உட்பொருளை உணர்ந்துபார்க்கும் நேரத்திற்குள்ளாக, என் துயரங்களின் வேதனை யாவும் முற்றிலும் மறைந்துவிடுகின்றன.

- Bible Student Archives

**25** **01, ஜனவரி 2026**

# ஜெபம்

ஜெபம் என்பது . . . மணி ஒன்றின் கீழ்ப்பகுதியில் உள்ள கயிற்றை ஒருவன் இழுக்கும்போது, மேலே இருக்கும் பெரிய மணியின் சத்தம் ஒலிப்பதுபோன்று, தேவனுடைய செவிகளுக்குக் கேட்கும்படி ஒலிக்கப்பண்ணும் காரியமாகும்.

சிலர் மணியை இலேசாக அசைக்கக்கூடச் சிரமப் படுகின்றார்கள், ஏனெனில் அவர்கள் மிகவும் உற்சாகமின்றி/ சோர்வுடன் ஜெபிக்கின்றார்கள்.

வேறு சிலர் கயிற்றை எப்போதாவது இழுக்கின்றார்கள்.

ஆனால் கயிற்றை உறுதியுடன் பற்றிப்பிடித்து, தன் சகல பலத்தையும்கொண்டு விடாமல் இழுக்கும் மனிதனே, பரலோக ஆசீர்வாதங்களைப் பெறுகிறவன்/கவனத்தைப் பெறுகிறவன் ஆவான்.

- Bible Student Archives

**26** **01, பிப்ரவரி 2026**

# பெலன்

"பெலன்" என்னும் சொல் "*முறுக்கிப் பின்னி பிணைக்கப் பட்ட*" என்று பொருள் தரும் வார்த்தையிலிருந்து வருகின்றது.

"கர்த்தரே என் ஜீவனின் பெலன்," "தேவனே என் ஆத்துமாவின் பெலன்" என்று சொல்லும்போது . . . அது எனது வாழ்வு கர்த்தருடன் சேர்த்துப் பின்னி பிணைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கின்றது. ஆகையால் தேவனும், (எனது ஆத்துமாவும்) நானும்

இரண்டு இழைகள்போன்று ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளோம் என்று புரிந்துகொள்ளலாம்.

ஒருவருக்கு உண்மையில் பலம் ஏதும் இல்லாவிட்டாலும், முடிவில்லாத சர்வவல்லவர் ஒருவருடன் பிணைந்திருக்கும் போது, மிகவும் பலவீனமானவர்கூடத் தளர்ந்துபோகமாட்டார்/தோற்க மாட்டார்.

ஆகையால், நாம் எவ்வளவு நம்பிக்கையுடன், "கர்த்தரே என் இரட்சிப்பின் பெலன்" என்று சொல்ல முடியும்!

- Bible Student Archives

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்
2. முறுமுறுப்பு
3. பாதங்கழுவுதல்
4. பெருமை
5. மன அழுத்தம்
6. குற்றங்கண்டுபிடித்தல்
7. ஜெபம்
8. மன்னிக்க முடியும்
9. ஆவியின் கனி
10. சோர்வு
11. நமது கர்த்தருடைய பாத்திரம்
12. சிட்சை
13. காத்துக்கொண்டேன்

புதுச் சிருஷ்டிக்கான
சிந்தனை துளிகள்

2024 பிப்ரவரி - டிசம்பர்

2025 ஜனவரி - டிசம்பர்

2026 ஜனவரி - பிப்ரவரி

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874